23.01.2026

DVC.1/2025

PW –1, செந்தமிழ்செல்வி க/பெ.பாப்புராஜ்

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எனது கணவர் காவல்துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய கணவர் திருமணத்திற்கு முன்பு அவரது பக்கத்து வீட்டுக்காரர் மூலமாகவும், LIC Agent முரளி என்பவர் மூலமாகவும் அறிமுகம் செய்யப்பட்டு எங்கள் குடும்பத்தாரால் திருமணம் பேசி முடிக்கப்பட்டது. 2021ம் வருடம் 9ம் மாதம் பூ வைத்து என்னை பெண் பார்த்தார்கள் என்றால் சரிதான். 09.12.2021ம் தேதி எனக்கும் எனது கணவருக்கும் SNP மகாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து 4, 5 நாட்கள் விருந்து விஷேசத்திற்கு சென்றுவிட்டோம். அவருக்கு ஒரு மாதம் விடுமுறை கிடைத்தது. திருமணம் முடிந்த அடுத்த மாதம் நாங்கள் மதுரை ஆயுதப்படை குடியிருப்பில் நானும் எனது கணவரும் குடியிருந்தோம். அங்கு ஒரு வாரம் இருந்தோம். பின்னர் எதிர்மனுதாரரின் வீட்டில் குடியிருந்தோம். என்னுடைய கணவர் நிலம் வாங்குவது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினையினால் என்னை அவருடைய வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார். நான் ஆயுதப்படை குடியிருப்பில் குடியிருக்கவில்லை. நான் மதுரை ஆயுதப்படை குடியிருப்பு குடியிருந்த விபரத்தை நான் எனது மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வளைகாப்பு 6ம் மாதம் 2022ம் வருடம் நடைபெற்றது. அது எதிர் மனுதாரர் வீட்டில் வைத்து நடந்தது. அங்கு எனது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். வளைகாப்பு முடிந்தவுடன் என் பெற்றோருடன் நான் எங்கள் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வளைகாப்பு நடந்த விஷயத்தை எனது நிரூபண வாக்குமூலத்திலோ மனுவிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு 22.08.2022ம் வருடம் திருமங்கலம் ரவிக்கலா மருத்துவமனையில் வைத்து பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். குழந்தை பிறந்த 2வது மாதத்தில் எனது கணவருக்கு திருவாரூர் ஊருக்கு பணி மாறுதல்

ஆகிவிட்டது. ஆனால் பணி திருச்சியில் இருக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் திருச்சியில் குடியிருந்தார். நானும் திருச்சியில் என் கணவரோடு 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்றேன். நான் திருச்சியில் தனிக்குடுத்தனம் இருந்ததை எனது மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் SI தேர்வுக்காக திருமங்கலத்தில் உள்ள பீனிக்ஸ் அகாடமியில் சேர்ந்தேன். என் குழந்தையை என் அம்மா பார்த்துக் கொண்டார். 2 மாதங்கள் அங்கு பயிற்சி எடுத்தேன். பிறகு எனது கணவருக்கு திருவாரூருக்கு மாறுதல் கிடைத்ததால் அங்கு சென்று குடியிருந்தோம் என்றால் சரிதான். இதை எனது மனுவில் சொல்லியுள்ளேன். நான் அவருடைய பெற்றோருக்கு பணம் அனுப்புவது சம்பந்தமாக ஏதாவது அவரிடம் பேசினேனா என்றால் இல்லை. நான் அவரது பெற்றோருக்கு பணம் அனுப்புவதை தடுத்து முழு சம்பளத்தையும் என் வசம் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

திருவாரூரில் குடியிருக்கும் போது சொத்து வாங்க வேண்டும் என்பதற்காக எனக்கும் எனது கணவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு என்னை அடைத்து வைத்துவிட்டார். என்னை என் கணவர் அடைத்து வைத்துவிட்டார் என்ற விபரத்தை எனது மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். திருவாரூரில் இருந்து என் அம்மா தான் என்னை கூட்டி வந்தார் என்றால் சரிதான். என்னுடைய கணவர் என் அம்மா அழைத்து வந்தவுடன் 20 நாட்கள் கழித்து என்னை அழைக்க வந்தார் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிலுக்கு அந்த சமயத்தில் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த நேரத்தில் எனக்கும் எனது குழந்தைக்கும் தீபாவளிக்கு துணிமணி எடுத்துக் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் என் கணவருடன் சேர்ந்து வாழ வரவில்லை என்ற காரணத்தினால் என் கணவர் எலிபேஸ்ட் உண்டு தற்கொலைக்கு முயற்சி செய்து அதனால் 14 தினங்கள் திருவாரூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்ற விபரம் தெரியும். நான் மருத்துவமனையில் அவர் சேர்ந்த மறுதினம் போய் 5 தினங்கள் மட்டும் அவருடன் இருந்தேன். என் குழந்தை இருந்ததால் நான் என் அம்மா வீட்டிற்கு வந்தேன். நான் மருத்துவமனையில் இருந்த போது என் அம்மா

அப்பாவும் உடன் இருந்தார்கள். அவர் நவம்பர் 27ம் தேதி சிகிச்சை முடிந்து வெளியேறினார் என்ற விஷயம் தெரியும். அவர் அந்த தேதியில் டிஸ்டார்ஜ் ஆகவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு என்னால் தேதி சொல்லமுடியாது. நான் திருவாரூரில் இருந்து எனது அம்மா வீட்டிற்கு வந்த பிறகு நான் திருவாரூர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி என் கணவர் விஷம் அருந்திய விஷயத்தை நான் எனது மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. என் கணவர் என்னோடு சேர்ந்து வாழ வேண்டும் என விரும்பும் போதெல்லாம் நானும் என்னுடைய பெற்றோரும் அவரை திருமங்கலத்தில் குடியிருக்க வேண்டும் என்று சொல்லி அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியதால் தான் அவர் தற்கொலை செய்யும் முடிவுக்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக அவர் அவரது வீட்டில் இருந்த போது நான் எனது அம்மா, சித்தி மற்றும் 2 மாமாக்கள் ஆகியோர்கள் அங்கு சென்றோம். அப்போது நான் சேர்ந்து வாழத்தான் சென்றேன். அவர் சேர்ந்து வாழ்வது என்றால் பணிபுரியும் இடமான திருவாரூருக்கு வரச் சொன்னதை நான் மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சிகிச்சை முடிந்து வந்த கணவருடன் பேச வேண்டும் என்பதற்காக தான் நான் எதிர் மனுதாரரின் வீட்டிற்கு சென்றேன். அப்போது நான் எனது பெற்றோருடன் சித்தி மற்றும் மாமாக்களுடன் சென்றதற்கு காரணம் பேச்சு வார்த்தை பேசி என் கணவரோடு சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சென்றோம். நாங்கள் தான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று தகராறு செய்து அவரது குடும்பத்தாரையும் அசிங்கமாக பேசி அங்கு கலவரத்தை உண்டாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. நான் இதற்கு முன்பு மதுரை பீமா ஜிவல்லர்ஸ்ஸில் வேலை பார்த்தேன். அங்கு எனக்கு 12,000/- ரூபாய் சம்பளமாக கொடுத்தார்கள். நான் B.E Computer Science படித்திருக்கிறேன். என்னுடைய படிப்புக்கு டெலிகாலில் பதவி கொடுப்பார்கள். நான் இன்னொரு கோர்ஸ் படித்தால் வேறு வேலைக்கு போகலாம்.

என்னுடைய கணவர் திருமண நாளிலிருந்து நான் அவரை விட்டுபிரிந்து வந்த காலம் வரை மாதாந்திர செலவுத் தொகைக்கு எனக்கு

என 5,000 முதல் 8,000/- ம் வரை வங்கி பரிவர்த்தனை மூலம் எனக்கு கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இதுவரை எந்த செலவுக்கும் அவர் பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவருடைய வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை பார்த்தால் எனக்கு அவர் அனுப்பியிருக்கிறாரா என்ற விபரம் தெரியும். நான் திருமங்கலத்தில் 2 முறையும் திருவாரூரில் ஒரு முறையும் எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது புகார் கொடுத்திருக்கிறேன். எனது தந்தை ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். அவருடைய செல்வாக்கின் பேரில் என் கணவர் மீதும் அவரது வீட்டார்கள் மீதும் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவரோடு சேர்ந்து வாழ்வதற்கு அவர் பல முயற்சிகள் எடுத்தும், நான் அதற்கு என் பெற்றோரின் அறிவுரையின் படி சேர்ந்து வாழவரவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் இதன் காரணமாக என்னிடம் இருந்து விவாகரத்து பரிகாரம் கேட்டு திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நான் ஆஜராகியுள்ளேன். நான் எனது கணவர் வாங்கும் சம்பளத்தை ஒரு மனுவில் ரூ.62,000/-ம் என்றும் பின்னர் ரூ.40,000/-ம் என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவருடைய சம்பள பட்டியல் எதுவும் நான் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய கணவர் எங்கு பணிபுரிகிறாரோ அந்த இடத்தில் நானும் எனது குழந்தையும் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். என்னுடைய நகைகள் அனைத்தையும் என் வசமே வைத்துக் கொண்டு என்னுடைய கணவர் வசம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானாகவே தன்னிச்சையாகவே பிரிந்து வந்து வாழ்வதாலும் எனது கணவர் பலவிதமாக முயற்சிகள் எடுத்தும் நான் அவரோடு சேர்ந்து வாழ மறுத்து வருவதாலும் என்னை பொறுத்தமட்டில் நான் ஜீவனாம்சம் வாங்க தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் முன்னுக்கு பின் முரணாக விஷயங்களை கூறியுள்ளதால் என்னுடைய மனு ஏற்க தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

எனது வளைகாப்பிற்கு முன்னதாகவே 4ம் எதிர்மனுதாரரின் வளைகாப்பு முடிந்துவிட்டது என்று சொன்னால் எனக்கு அவருக்கு வளைகாப்பு நடத்தப்பட்ட நாள் தெரியாது. நான்  எனது கணவர் மீது திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண்.15/2024 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. எனது கணவர் என்னிடம் இருந்து விவாகரத்து கோரிய பின்பு தான் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் அவர் மீது புகார் கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் கணவரோடு பல இடங்களில் தனிக்குடுத்தனமாக இருந்த நிலையில் 2 முதல் 4ம் எதிர்மனுதாரர்களோடு சேர்ந்து வாழாத நிலையில் அவர்கள் மீது காழ்புணர்ச்சியின் காரணமாக அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் அருப்புக்கோட்டை தாலுகா கோபாலபுரத்தில் திருமணம் செய்துள்ளார். 2 வழக்குகளிலும் நான் ஜீவனாம்சம் கேட்டு இருக்கிறேன். என் கணவரை பழிவாங்குவதற்காக அவருடைய குடும்பத்தார்களும் 2 முதல் 4 வரையிலானவர்களையும் சேர்த்து நஷ்டஈடு கேட்டியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பெற்றோர் வீட்டில் வைத்து என் கணவர் குடும்பத்தார் பிரச்சினை செய்ததாக நான் சொல்லவில்லை. நான் கேட்டுள்ள பரிகாரங்கள் அனைத்து எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நகைகள் அனைத்தும் என் வசம் வைத்து அவர்கள் வசம் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்தவழக்கிலும் நான் தனியாக தன்னிச்சிசையாக பிரிந்து சென்று வாழ்வதாக 1ம் எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் தரவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது என் பெற்றோர் வீட்டில் குடியிருப்பதால் எனக்கு வீட்டு வாடகைக்கான தொகை கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை.